தகவல் வெளியீடு 27/ஏப்ரல் 2022

# INFORM

MINISTRY OF MANPOWER

சிங்கப்பூரில் குடிபெயர்ந்த இல்லப் பணிப்பெண்களுக்கான (MDWs)
மனிதவள அமைச்சின் (MOM) வெளியீடு

## உங்களுக்குத் தெரியுமா?

கடந்த 3 வருடங்களில் சட்ட விரோதமாக பணியில் ஈடுபடுத்தப்பட்ட சாத்தியம் தொடர்பாக MOM ஏறத்தாழ 2,000 புகார்களை பெற்றுள்ளதென்றும் தவறிழைத்த 400-க்கும் மேற்பட்ட முதலாளிகளுக்கெதிராக அமலாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதென்றும் உங்களுக்குத் தெரியுமா



**வெளிநாட்டு ஆள்பல வேலை நியமனச் சட்டம் 1990 (EFMA 1990)**- ன் கீழ், MOM -க்கு தெரிவிக்கப்பட்ட வீட்டு முகவரியில் மட்டுமே வீட்டுப் பணிகளை செய்ய குடிபெயர்ந்த இல்லப் பணிப்பெண்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் வேறொருவருக்கு வேலை செய்வதோ அல்லது தங்கள் முதலாளியின் தொழில் சார்ந்த பணியில் ஈடுபடுவதோ கூடாது.

இத்தகைய ஒரு சூழ்நிலையை எதிர்கொண்டால் MOM -க்கு தெரிவிக்கவும்:

MDW உதவித் தொலைப்பேசி எண்ணை அழைக்கவும்: 1800 339 5505

பின்வரும் இணையதள இணைப்பைப் பயன்படுத்தி MOM -க்கு தெரிவிக்கவும்: www.mom.gov.sg/eservices/services /report-an-infringement

பயனுள்ள தொடர்பு எண்களின் பட்டியலுக்கு இங்கே வருடவும்

சிங்கப்பூரில் உங்கள் வேலை தொடர்பாக மேலும் தகவலுக்கு இங்கே செல்லவும் :

Publications and resources (mom.gov.sg)

Ministry of Manpower | Facebook

# உங்களை நீங்களே நன்றாக கவனித்துக்கொள்கிறீர்களா?



மகிழ்ச்சியற்ற நிலையில் எளிதில் களைப்படைகிறீர்களா, அல்லது பசியின்மையுடன் இருக்கிறீர்களா? இவை மனச்சோர்வுக்கான அறிகுறிகள். உணர்வுகளுடன் போராடுவது அல்லது சில பிரச்சனைகளை எதிர்கொண்டால் அதை யாருடனாவது பகிர்ந்துகொள்ளுங்கள். மனத்தளவில் நன்றாக உணர்வீர்கள்.

**உதவிக்கு பின்வரும் உதவித் தொலைப்பேசி எண்களில் ஏதேனும் ஒன்றையும் நீங்கள் அழைக்கலாம்:**

குடிபெயர்ந்த இல்லப் பணிப்பெண்களுக்கான MOM உதவித் தொலைப்பேசி எண்:
1800 339 5505

CDE (இல்லப் பணியாளர்களுக்கான நிலையம்):
1800 225 5233

FAST (வெளிநாட்டு இல்லப் பணியாளருக்கான சமூக ஆதரவு மற்றும் பயிற்சி சங்கம்):
1800 339 4357

AEAS (வேலை அமைப்புகள் சங்கம்): 6836 2618



# டெங்கித் தடுப்பு

ஏடிஸ் வகை கொசுக்கள் கடிப்பதன் மூலம் டெங்கிக் காய்ச்சல் பரவுகிறது. இது உயிருக்கு ஆபத்து விளைவிக்கக் கூடியதாகும். கொசுப் பெருக்கத்துக்கு 20-காசு அளவுள்ள ஒரு துளி தண்ணீரே போதுமானதாகும்!

பின்வரும் விதிகளைப் பின்பற்றுவதன் மூலம், தேங்கி நிற்கும் நீரை அப்புரப்படுத்தி கொசுப் பெருக்கத்தை தடுத்து எல்லோரும் நம் பங்கை ஆற்றுவோம்.



- கடின மண்ணை உடைத்திடுங்கள்
- பூந்தொட்டி தட்டுக்களை தூக்கி உயர்த்தி காலி செய்யுங்கள்
- வாளிகளை கவிழ்த்து அவற்றின் விளிம்புகளை துடைத்து விடுங்கள்
- பூஞ்ஜாடிகளில் தண்ணீரை மாற்றுங்கள்
- கூரைச் சாக்கடைகளை துப்புரவாக வைத்து BTI பூச்சிக்கொல்லி மருந்திடவும்

## சுய - பாதுகாப்பு

பின்வரும் நடவடிக்கைகளை கடைப்பிடித்து டெங்கி நோயிலிருந்து உங்களையும் உங்கள் முதலாளியின் குடும்பத்தையும் பாதுகாத்துக்கொள்ளுங்கள், குறிப்பாக நீங்கள் டெங்கி குழுமமுள்ள வட்டாரத்தில் வசிப்பவராக இருந்தால்:



வீட்டைச் சுற்றி இருட்டான மூலைகளில் பூச்சிக்கொல்லி மருந்தை தெளித்திடுங்கள்.



பூச்சி நெருங்காது விலக்கும் மருந்தை தடவுவதை வழக்கமாக்கிக்கொள்ளுங்கள்.



முழுக்கைச் சட்டைகள் மற்றும் நீண்ட கால்சட்டைகளை அணிந்துகொள்ளுங்கள்.

### என்னுடைய பூச்சி விலக்கும் மருந்து பலனளிக்கிறதா என்று எனக்கு எப்படித் தெரியும்?

DEET, picaridin அல்லது IR3535 போன்ற செயல்திறன் பொருட்கள் அடங்கிய பூச்சி விலக்கும் மருந்துகள் பலனளிப்பவை மற்றும் பாதுகாப்பானவை.

இயற்கை பூச்சி விலக்கும் மருந்துகள் (எ.கா. சித்ரோனல்லா யூகாலிப்டஸ் போன்ற அத்தியாவசிய எண்ணெய்கள்) பலனளிப்பதில் மாறுபடும் மற்றும் கூடுதலாக அடிக்கடி பயன்படுத்தும் அவசியம் ஏற்படும்.



# உரிமம் இல்லாமல் கடன் வழங்குவோரிடம் கடனாக பணம் பெறாதீர்கள்!

சிங்கப்பூரில் உரிமம் இல்லாமல் கடன் வழங்குவோர் அதிகமான வட்டி விதிக்கின்றனர். இதனால் உங்களுக்கு கடன்களைத் தீர்க்க சிரமமாக இருக்கும். உரிமம் இல்லாமல் கடன் வழங்குவோரிடமிருந்து நீங்கள் பணம் கடன் பெற்றதாக கண்டறியப்பட்டால் சிங்கப்பூரில் வேலை செய்ய உங்களுக்குத் தடை விதிக்கப்படும்.

உங்களுக்குப் பண நெருக்கடி இருந்தால், உதவி நாடி உங்கள் முதலாளியிடம் பேசுங்கள். உரிமம் இல்லாமல் கடன் வழங்குவோரிடமிருந்து பணம் கடனாகப் பெற்று உங்களுக்கும் உங்கள் முதலாளியின் குடும்பத்துக்கும் ஆபத்தை உண்டுபண்ணாதீர்கள்.

பொன்னான விதியை பின்பற்றுங்கள் – வசதிக்கேற்ப செலவு செய்யுங்கள்!

# இணையம் வழி கடன் மோசடிகள்!

கடன் சேவை வழங்குவதாக குறுஞ்செய்தி/வாட்ஸ் அப் செய்தி ஒன்று பெற்றீர்களா? கடன் வழங்கப்படும் முன்பாக வைப்புத் தொகையாக ஒரு குறிப்பிட்ட தொகை பணத்தை பரிமாற்றம் செய்யும்படி உங்களுக்கு அறிவுறுத்தப்பட்டதா? இவை கடன் மோசடியின் அறிகுறிகளாக இருக்கலாம்.

## பின்வரும் நடவடிக்கைகளை கடைப்பிடித்து இத்தகைய மோசடிகளுக்கு நீங்கள் பலியாகாமல் தடுத்துவிடுங்கள்:



- குறுஞ்செய்தி தளங்களில் வரும் கடன் விளம்பரங்களுக்கு பதிலளிக்க வேண்டாம். ஏனென்றால் இவை வழக்கமாக உரிமம் இல்லாமல் கடன் வழங்கும் கும்பல்களிடமிருந்து வருபவை.
- வாட்ஸ் அப்பில் அல்லது மூன்றாந்தரப்பு செயலிகள் மூலமாக வரும் வேண்டாத கடன் விளம்பரங்களை எப்பொழுதும் **புறக்கணித்துவிடுங்கள்**, **தடுத்துவிடுங்கள்** மற்றும் **தெரியப்படுத்துங்கள்**.
- வங்கிக் கணக்கு எண் அல்லது கடவுச்சீட்டு எண் போன்ற உங்களின் தனிப்பட்ட தகவலை அந்நியர்களிடம் கொடுக்க வேண்டாம்.
- நீங்கள் கஷ்டப்பட்டு சம்பாதித்த பணத்தை அந்நியர்களிடம் மாற்றிவிட வேண்டாம்.

**உங்களுக்கு சந்தேகம் இருந்தால், மோசடிக்கெதிரான உதவித் தொலைப்பேசி எண்ணை 1800 – 722 6688 அழையுங்கள்**